பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 18 சனிக்கிழமை 04.12.2021 கதிர் 257

## கொக்கிளாய் பகுதியில் காஸ் அடுப்பு வெடிப்பு!

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, கொக்கிளாய் மேற்கு கிராமசேவர் பிரிவில், புளியமுனை பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று மாலை எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்துள்ளது. 2

# மனுஷ எம்.பி. மீது தாக்குதல் முயற்சி

### ஐக்கிய மக்கள் சக்தி சபையிலிருந்து வெளிநடப்பு



எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தாக்க முற்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதான எதிர்க் 2



## வவுனியாவில் மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து!

### வர்த்தக நிலையத்திற்குள் புகுந்தது கார்

வவுனியாவில் ஹொரவப்பொத்தானை வீதியில் இன்று மதியம் மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. கார் ஒன்று வர்த்தக நிலையத்திற்குள் புகுந்ததால் வர்த்தக நிலையத்திற்கும் சேதம் ஏற்பட்டது.

வவுனியா நகரில் இருந்து ஹொரவப்பொத்தானை வீதி வழியாக சென்ற கார் ஒன்று ராணி மில் வீதியில் திரும்பிய போது பின்னால் வந்த பாரவூர்த்திகாருடன்மோதிவிபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான கார் அப்பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றின் முன்னால் நின்ற மோட்டர் சைக்கிளுடன் மோதி பின் வர்த்தக நிலையத்திற் 2



## மூத்த எழுத்தாளர் செ.கணேசலிங்கன் நம்மைப் பிரிந்தார்

ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களுள் முக்கியமானவராகக்கொள்ளப்படும்செ.கணேசலிங்கன் தமது 93 2

## மீனவர்களுக்குத் தீர்வு கோரி யாழில் கையெழுத்து வேட்டை

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

இழுவைமடி மீன்பிடித் தொழிலுக்கு எதிரான சட்டங்களை நடைமுறைப்படுத்தி நிலையான மீன்பிடித் தொழிலை உறுதிப்படுத்தக் கோரி இன்று யாழ்ப்பாணத்தில் கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் இணையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் 2





## இராமதாஸ் காலமானார்

யுத்த காலத்திலும் பின்னரும் தமிழர் தாயகத்தில் சமூகக் கட்டுமானங்களை மேம்படுத்துவதில் முன்னின்று உழைத்த 2

## கிழக்கு செயலணியில் நியமிக்கப்பட்டமை தொடர்பில் எனக்கு எதுவுமே தெரியாது!

### வடக்கின் முன்னாள் பிரதம செயலர் பத்திநாதன் இப்படி கூறுகின்றார்

(ந.லோகதயாளன்)

கிழக்கு மாகாண தொல்பொருள் ஜனாதிபதி செயலணிக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மூவரில் எனது பெயரும் இருப்பது தொடர்பில் எனக்குத் தெரியாது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் 2



## திருமலையில் கடலில் மூழ்கி 2 சிறுவர்கள் பரிதாபச் சாவு!

திருகோணமலை, ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவில் உள்ள வாழைத்தோட்டம் கடலில் நீராடிக் கொண்டிருந்த இரண்டு சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், வாழைத்தோட்டம் கடலில் நான்கு சிறுவர்கள் குளித்துக் கொண்டிருந்த நிலையில், இதில் இரண்டு சிறுவர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டு மூழ்கியுள்ளனர்.

இதன்போது உயிர் தப்பிய மற்றைய இரண்டு சிறுவர்கள் உடனடியாக பிரதேச மக்களிடம் நடந்த சம்பவத்தைத் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, நீரில் மூழ்கிய சிறுவர்களைக் கடலில் தேடியபோது அவர்கள் உயிரி 2

## தடைப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை அரசு தொடர்ச்சியாக முன்னெடுக்கவேண்டும்

### யாழில் வைத்து சம்பிக்க வலியுறுத்து

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் தடைப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை அரசு தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்

இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட 2





## யாழ்ப்பாணத்தை இன்று சுற்றியடித்தார் சம்பிக்க!

(இ.கலையமுதன்)

வடக்குக்கு வருகை தந்த முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டார். 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


## மனுஷ எம்.பி. .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இன்று வெளிநடப்புச் செய்தனர்.

எதிரணி எம்.பிக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை தமது கட்சி எம்.பிக்கள் சபை அமர்வில் பங்கேற்க மாட்டார்கள் என்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அத்துடன், மனுஷ நாணயக்காரவை ஆளுங்கட்சி எம்.பிக்கள் சபை வளாகத்தில் வைத்து தாக்க முற்பட்ட சம்பவத்துக்கும் கடும் எதிர்ப்பையும் அவர் வெளியிட்டார்.

அதேவேளை, ஆளுங்கட்சி எம்.பிக்கள் சிலர் நேற்றும் சபைக்குள் வைத்து மனுஷ நாணயக்கார மீது தாக்குதல் நடத்த முற்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொக்கிளாய் ...



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின் வெட்டு அமுலில் இருந்த நிலையில், வீட்டு வெளிச்சத்துக்காக மெழுகு வர்த்தி ஏற்றுவதற்காக எரிவாயு அடுப்பை இயக்கியபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என வீட்டார் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் வெடிப்புச் சம்பவத்தின் போது எவ்விதச் சேதங்களும் ஏற்படவில்லை.

## மூத்த எழுத்தாளர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆவது அகவையில் இன்று 04 ஆம் திகதி காலையில் சென்னையில் மறைந்தார்.

இலங்கைவடபுலத்தில்உரும்பிராயில் 1928 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி உரும்பிராய் கிராமத்தில் செல்லையா - இராசம்மா தம்பதியருக்கு இரண்டாவது புதல்வனாகப் பிறந்த கணேசலிங்கன், தனது ஆரம்பக்கல்வியை உரும்பிராயில் கிறிஸ்தவ பாடசாலையிலும் அதனையடுத்து சந்திரோதய வித்தியாசாலையில் ஆறாம் தரம் வரையிலும் கற்ற பின்னர், யாழ். பரமேஸ்வரா கல்லூரியில் மேற்கல்வியை தொடர்ந்தார்.

கணேசலிங்கன் அன்று கற்ற பரமேஸ்வராக் கல்லூரிதான் பின்னாளில் 1974 இல் யாழ். பல்கலைக்கழக வளாகமாக உருமாறியது. இந்தப்பல்கலைக்கழகத்தில் 1976 ஆம் ஆண்டு நாவல் நூற்றாண்டு ஆய்வரங்கு நடந்தபோது, கணேசலிங்கனின் நாவல்களும் திறனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

சுமார் அறுபதிற்கும் மேற்பட்ட நாவல்கள் பல சிறுகதைகள், கட்டுரை - விமர்சன நூல்கள் - சிறுவர் இலக்கியம் - பயண இலக்கியம் என நூறுக்கும் மேற்பட்ட நூல்களை தமிழ் இலக்கிய உலகிற்குத்தந்துள்ள கணேசலிங்கனின் தற்போதைய வயதிலிருந்து கணக்குப் பார்த்தாலும் வருடத்துக்கு ஒரு புத்தகம் என பிறந்தது முதல் இன்று வரையில் அதிகம் புத்தகங்கள் எழுதியிருக்கின்றார்.

அவரது இறுதிக் கிரியைகள் இன்று சென்னையில் இடம்பெற்றன.

மூத்த எழுத்தாளர் செ. கணேசலிங்கன் மறைவுக்குத் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் அஞ்சலிக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சமூகவிடுதலைக்காகப் பேனாவை ஆயுதமாக்கிக் குரல் கொடுத்தவர் அன்னார். இவரதுபுனைகதைஇலக்கியங்கள் பாடசாலை மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் மாணவர்களுக்கான பாட நூல்களாகக் கொள்ளப்படுகின்றன. ஐம்பதுக்கும் மேற்பட்ட நாவல்களை படைத்த பெருமைக்குரியவர். அதைவிட சிறுகதை மொழிபெயர்ப்பு மற்றும் கட்டுரைகள் என்ற நிலையிலும் இலக்கியங்களைப் படைத்துள்ளார்.

ஈழத்தமிழ் உலகில் காலத்தின் நிலை உணர்ந்து கனதியான பங்களிப்பை நல்கிய எழுத்தாளர் செ. கணேசலிங்கனுக்கு யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம் - என்று உள்ளது.

## மீனவர்களுக்குத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்ட இந்தக் கையெழுத்துச்சேகரிக்கும் நடவடிக்கை யாழ். நகரப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

மக்களிடம் பெற்றுக்கொள்ளப்படும் கையெழுத்துக்களுடனான மகஜர் ஜனாதிபதி, சட்ட மா அதிபர் மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோரிடம் கையளிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கை இடம்பெற்ற நிலையில் இன்று யாழ். நகரப் பகுதியில் அது முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இராமதாஸ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறியியலாளரான சமூகச் சிற்பி எஸ். இராமதாஸ் (வயது 65) நேற்று கொழும்பில் காலமானார்.

இயூரோவில் குறூப்நிறுவனங்களின் தலைவரான இவர் தமிழர் தேசத்தில் பல கட்டுமானங்களை நிறுவுவதில் அளப்பரிய பங்களித்த தமிழ்த் தேசியவாதி, யுத்தத்துக்கு மத்தியிலும் மண்ணில் நின்று பிடித்தவர். யாழ்.மாநகரசபை செயல்பகுதி பொறியியலாளராகவும் இருந்தவர்.

யாழ்ப்பாண வர்த்தக, கைத்தொழில் சங்கத்தின் ஆரம்பகாலத் தலைவரான அவர், யாழ்ப்பாணம் முகாமையாளர் அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவர். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவரான பொறியியலாளர் இராமதாஸ் யாழ். பல்கலைக்கழக மூதவையின் உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

## கிழக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் தொல்பொருள் செயலணி என உருவாக்கப்பட்ட செயலணியில் முதலில் 13 உறுப்பினர்களும், பின்னர் மூவரும் இணைக்கப்பட்டபோதும் அனைவரும் சிங்கள இனத்தவர்களாகவே காணப்பட்டமை தொடர்பில் அதிக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இதையடுத்து கிழக்கு செயலணி அமைத்து 13 மாதங்களின் பின்னர் முதல் தடவையாக இரு தமிழர்களும் ஒரு முஸ்லிமும் இணைக்கப்பட்டுள்ளனர் என்று நேற்று வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் உள்ளவர்களில் ஒருவரான மன்னாரைச் சேர்ந்த அ.பத்திநாதனின் பெயர் இணைக்கப்பட்டுள்ளது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளிவரும் வரையில் தனக்குத் தெரியாது எனவும், இந்தத் துறையானது தனக்குப் பரீட்சியம் அற்ற ஒன்று எனவும் அவர் தெரிவித்தார்.

## திருமலையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

தரம் 09 இல் கல்வி கற்கும் 14 வயதுடைய யோகேந்திரராசா லக்சன் வயது, தரம் 06 இல் கல்வி கற்கும் 12 வயதுடைய டினேஸ்காந்த் நிம்ரோசன் ஆகியோரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த இரண்டு சிறுவர்களின் சடலங்களும் ஈச்சிலம்பற்று வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில், ஈச்சிலம்பற்று பொலிஸாரும், திடீர் மரண விசாரணை அதிகாரி ஆகியோர் பார்வையிட்டனர். அதன்பின்னர் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்குச் சடலங்கள் அனுப்பப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தடைப்பட்டுள்ள ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் கொழும்பு, காலி போன்ற நகரங்களைப் போல் யாழ்ப்பாணம் நகரத்தையும் அபிவிருத்தி செய்யும் முகமாக நல்லாட்சி அரசால் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள் வடபகுதியில் முன்னெடுக்கப்பட்டன.

குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல மில்லியன் ரூபா செலவில் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தூர இடங்களுக்கான பஸ் தரிப்பு நிலையம், யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான புதிய கட்டடத் தொகுதி உள்ளிட்ட மேலும் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும், தற்போது அவ்வாறான திட்டங்களைத் தொடர்வதற்கான நிதி ஒதுக்கீடுகள் அனைத்தும் இந்த அரசால் நிறுத்தப்பட்டுள்ளன. ஏன் அவ்வாறு செய்கின்றார்கள் என்று தெரியவில்லை. அரசியல் பழிவாங்கலுக்காகவே இவ்வாறு செய்கின்றார்கள் என நினைக்கின்றேன்.

ராஜபக்ஷக்கள் தமது பெயர் குறிப்பிடப்படும் அபிவிருத்தித் திட்டங்களை மாத்திரமே செயற்படுத்துவார்கள். மக்கள் நலன் சார்ந்து செயற்படமாட்டார்கள் என்பதே உண்மை.

நான் யாழ்ப்பாணத்திலிருந்து இந்த அரசுக்கு ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றேன். தடைப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கி மக்கள் சார்ந்த திட்டங்களை முன்னெடுங்கள் - என்றார்.

## யாழ்ப்பாணத்தை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை 9 மணியளவில் யாழ்ப்பாணத்தின் பஸ் நிலையம் பகுதிக்கு விஜயம் செய்த அவர் அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடியமையுடன் 43 படையணியின் துண்டுப்பிரசுரங்களையும் வழங்கினார்.

ஜாதிக ஹெல உறுமயவில் இருந்து விலகிய பின்னர் சம்பிக்க ரணவக்க புத்திஜீவிகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கிய அமைப்பே 43 படையணி ஆகும்.

அத்துடன் தான் அமைச்சராக இருந்த காலப் பகுதியில் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்களின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்ததுடன் நெடுந்தூர பஸ் நிலையம், யாழ்ப்பாணம் மாநகர சபை புதிய கட்டடம் போன்றவற்றைப் பார்வையிட்டு தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் நெடுந்தூர புதிய பஸ் நிலையம் திறக்கப்பட்ட பின்னரும் பாவனைக்கு வராமல் இருப்பது தொடர்பாக அப்பகுதியில் உள்ள வர்த்தகர்களுடன் கலந்துரையாடினார்.

## வவுனியாவில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குள் புகுந்தது. இதன் காரணமாக கார் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன சேதமடைந்தன. வர்த்தக நிலையத்தின் முன் பகுதியும் இடிந்து விழுந்து, அதன் கூரைப்பகுதியும் சேதமடைந்துள்ளது.








# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மோசமாகும் பொருளாதாரம்

பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் அரசு அதனைச் சமாளிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுப்பது என்று தெரியாமல் தடுமாறுகின்றது. சில சமயங்களில் பொருத்தமற்ற முறையில் விதிமுறைகளைப் புகுத்தித் தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போடுகின்றது.

அந்நிய செலாவணிக் கையிருப்பை தொலைத்துவிட்ட அரசு, வெளிநாட்டில் இருக்கும் – உழைக்கும் – இலங்கையரின் பணத்தில் கண் வைக்கின்றது. அது தப்பில்லை. ஆனால் அதில் ஒரு நீதி, நியாயமான அணுகுமுறை இருக்க வேண்டும்.

நாட்டில் மிக மோசமான பணவீக்கம். ரூபாவின் பெறுமதி சடுதியாக வீழ்ந்து வருகிறது. தனது கடன்கள், கடப்பாடுகள், கொடுப்பனவுகளைச் சமாளிப்பதற்காக பணத்தை அச்சிட்டுத் தள்ளுகின்றது அரசு. அதனால் ரூபாவின் – பண நோட்டின் – பெறுமதி வெறும் அச்சிட்ட காகிதம் மட்டுமே என்ற நிலையை நோக்கிச் சரிந்து கொண்டிருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை செயற்கையான விதத்தில் 203 ரூபா என்ற மட்டத்தில் இழுத்துப்பிடித்து வைத்திருக்கின்றது அரசு.

ஆனால் வெளிச் சந்தையில் – நாணயப் பரிமாற்று வர்த்தகத்தில் – ஒரு டொலருக்கான ரூபாவின் பெறுமதி 240 ரூபாவாக உயர்ந்துவிட்டது.

இந்தச் சூழ்நிலையில் வெளிநாட்டில் உழைக்கும் இலங்கையர் ஒருவர் அந்த உழைப்பை இலங்கை அரசின் ஏற்பாடுகள் ஊடாக இலங்கைக்கு அனுப்புவாராயின் டொலருக்கு ஆக 203 ரூபாவும், அதற்கு மேலதிகமாக இப்போது ஓர் ஊக்குவிப்பாக அரசு அறிவித்திருக்கும் ஒரு டொலருக்கான மேலதிக கொடுப்பனவு பத்து ரூபாவுமாகச் சேர்த்து ஆக 213 ரூபாவையே பெறுவார். அதையே பிற வழிகளில் இலங்கைக்கு அனுப்பினால் டொலருக்கு 240 ரூபா கிடைக்கும். ஒரு டொலருக்கு 27 ரூபா அதிகம் கிடைக்கையில் சாதாரண பிரஜை எதை நாடுவான்?

அப்படி முறையற்ற விதத்தில் பணத்தை அனுப்புவோரின் வங்கிக் கணக்குகள் உறைய வைக்கப்படும் என எச்சரிக்கின்றது மத்திய வங்கி. நல்லது. அப்படிச் செய்தால் என்ன நடக்கும்? அவ்வாறு பணத்தை ஒவ்வொரு தடவையும் இலங்கைக்கு அனுப்புவோர், அந்தக் கணக்கில் பணத்தைச் சேகரிக்கவோ, சேமிக்கவோ மாட்டார்கள். அந்தக் கணக்கு எந்நேரமும் அரசால் உறையவைக்கப்படும் ஆபத்து இருப்பதால், அந்தக் கணக்கு மூலம் பணத்தை இலங்கை அனுப்பினாலும், உடனடியாகவே அதிலிருந்து பணத்தை வெளியே எடுத்து விடுவர். அதனால் என்ன நடக்கும்? இலங்கையில் வங்கிக் கணக்கு ஒன்றில் இலங்கைப் பணத்தில் சேமிப்பில் இருக்கும் தொகையையும் இல்லாமலாக்கத் தூண்டுகின்றது அரசின் இந்த விதிமுறை.

வெளிநாட்டில் உழைக்கும் நம்மவரின் உழைப்பை தனக்கு விரும்பிய – உண்மையில் சாத்தியமற்ற – ஒரு விலையில் அறவிட்டு, சுரண்டுவதற்கு இலங்கை அரசு எடுக்கும் இந்த நடவடிக்கை உண்மையில் நிதிக்கொள்கை ரீதியான கொள்ளை – அராஜகம் – ஆகும். அந்த உழைப்புக்கு உரிய பெறுமதியைக் கொடுக்க மறுத்து, சாத்தியமற்ற குறைந்த விலையில் அதைச் சூறையாட அரசு எண்ணுவது – முயற்சிப்பது – நாட்டின் பொருளாதார நிலைமையை மேலும் மேலும் நெருக்கடிக்குள் தள்ளுமே தவிர, மீள வழி செய்யாது.

டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை தன்னிஷ்டப்படி செயற்கையாக 203 ரூபா என்ற கட்டத்தில் வைத்துக் கொண்டு, அந்நிய செலாவணியை அரசு ஈட்டுவது என்பது சாத்தியப்படக்கூடிய ஒன்றேயல்ல. அதன் பெறுமதியை சந்தைக்கு ஏற்ப மிதக்கவிடாமல், இழுத்துப் பிடித்து வைத்து, செயற்கையாக ரூபா நோட்டுக்கு மதிப்புக் காட்ட விழையும் இந்த முட்டாள்தனமான முயற்சி, நாட்டின் நிதி நிலைமையை – பொருளாதாரத்தை – இன்னும் மோசமாக்கப் போகின்றது.

# ‘சீன மேனியா’ நோய்த் தொற்று எதிர்க்கட்சிக்கு ஏற்பட்டுள்ளது

## ரோஹித அபேகுணவர்தன சாட்டை



சீனாவுடன் நாம் வர்த்தக உறவை முன்னெடுப்பதில் தவறேதும் இல்லை, எமது அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் நிலத்தையோ வளத்தையோ எவருக்கும் விற்கப்போவதில்லை. ஆனால்எதிர்க்கட்சியினருக்கு இன்று சீன மேனியா நோய் தொற்றியுள்ளதாக அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற துறைமுகங்கள் அமைச்சு மற்றும் நீர் வழங்கல் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக்கூறினார். அவர் மேலும் கூறுகையில் –

கொழும்பு துறைமுககிழக்கு முனைய பணிகளை இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவுக்கு கொண்டு வந்து அடுத்த ஆண்டில் கட்டம் கட்டமாக அதன் பணிகளை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேபோல் மேற்கு முனையத்தை அதானி நிறுவனத்துடன் இணைந்து அபிவிருத்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் தெற்கு மற்றும் மேற்கு முனையங்களை எமக்கான துறைமுக முனையங்களாக மாற்றுவோம்.

எதிர்க்கட்சியினருக்கு ‘சீன மேனியா’ நோய் உள்ளது. நாம் சீனாவுடன் வியாபார வர்த்தக உறவை மேற்கொள்ளக்கூடாதா, அதில் என்ன தவறு உள்ளதென தெரிவிக்க வேண்டும். நாம் நிலத்தையோ வளத்தையோ எவருக்கும் விற்கவில்லை. நாட்டின் அபிவிருத்திக்காக இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவே முயற்சிக்கின்றோம். கொழும்பு துறைமுகத்தை மட்டுமல்ல, காலி துறைமுகம், திருகோணமலை இயற்கை துறைமுகம் ஆகியவற்றையும் அபிவிருத்தி செய்யவுள்ளோம்.

சுற்றுலாத்துறையை கவரும் மிகவும் முக்கிய துறைமுகமாக காலி துறைமுகத்தை முழுமையாக புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும், கொரியாவுடன் இது தொடர்பில் கலந்துரையாடி வருகின்றோம். திருகோணமலை துறைமுகத்தையும் அதேபோல் வர்த்தக துறைமுகமாக மாற்றியமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. –என்றார்.



# புதையல் தோண்டிய குற்றச்சாட்டு திருகோணமலையில் எண்மர் கைது



திருகோணமலை ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புதையல் தோன்றிய குற்றச்சாட்டின் பேரில் எட்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளோம் என ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தோப்பூர்,கந்தளாய் மற்றும் ஈச்சிலம்பற்று பகுதியைச் சேர்ந்த 45 வயதிலிருந்து 65 வயதுக்குட்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் வெருகல், மாவடிச்சேனை பகுதியில் வீடு ஒன்றில் புதையல் தோண்டிய போதே வெருகல் பகுதியிலுள்ள இராணுவ புலனாய்வு பகுதியினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து எட்டு சந்தேக நபர்களைக் கைதுசெய்து ஈச்சிலம்பற்று பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளோம் எனவும் ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களிடமிருந்து மண்வெட்டி 2, அலவாங்கு 1,சவல் 2, கேன் போத்தல் 1, தாச்சு 1, பிக்காசு 1, பானை 1 மற்றும் மோட்டார் சைக்கிள் 2 போன்றவற்றையும் கைப்பற்றியுள்ளோம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டுவருவதோடு மூதூர் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளோம் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# 90 வீத மின் விநியோகம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது

நாடளாவிய ரீதியில் தடைப்பட்ட மின்சார விநியோகம் 90 சதவீதம் வழமைக்கு திரும்பியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

பல மின் துணை மின் நிலையங்கள் மீண்டும் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ள நிலையில் மின்சார விநியோகம் பெரும்பாலும் வழமைக்குத் திரும்பியுள்ளது.

# வடமேல்மாகாணத்தின்ஆளுநருக்குகொரோனா



வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரேவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை அடுத்து அவர் தற்போது தனிமைப் படுத்தப்பட்டுள்ளமைடன், அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் தொடர்பான தகவல்களை சுகாதாரப் பிரிவினர் திரட்டி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# கருக்கலைப்பு உரிமையை ரத்து செய்ய மைக் பென்ஸ் கோரிக்கை




அமெரிக்காவில் கருக்கலைப்பை சட்டப்பூர்வமாக்கிய 1973 ஆம் ஆண்டு ரோவி வேட் வழக்கை ரத்து செய்யுமாறு முன்னாள் அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் உயர் நீதிமன்றத்தை நாடியுள்ளார்.

இந்த தீர்ப்பு மில்லியன் கணக்கான பிறக்காத குழந்தைகளுக்கு தீங்கு விளைவிக்கும் தவறான முடிவு என்றும் மைக் பென்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் 15 வாரங்களுக்குப்பின்னர் கருக்கலைப்பைத் தடைசெய்யும் மிசிசிப்பி சட்டத்தின் மீதான வாதங்கள் உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்றன.

இதனை அடுத்து இந்த வழக்கு மீதான தீர்ப்பு அடுத்த கோடையில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1973 ஆம் ஆண்டு தீர்ப்பு அமெரிக்காவில் பெண்களுக்கு கர்ப்பத்தின் முதல் மூன்று மாதங்களில் கருக்கலைப்பு செய்வதற்கான முழு உரிமையையும், இரண்டாவது மூன்று மாதங்களில் வரையறுக்கப்பட்ட உரிமைகளையும் வழங்கியது.



# இதுவரை 29 நாடுகளுக்குள் நுழைந்தது ஒமிக்ரோன்!

புதிதாக அடையாளம் காணப்பட்ட ஒமிக்ரோன் தொற்று இதுவரை 29 நாடுகளில் பரவியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த 29 நாடுகளிலும் மொத்தமாக 372 பேருக்கு ஒமிக்ரோன் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதன்காரணமாக பல்வேறு நாடுகளும் கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களை அறிவித்துள்ளன. குறிப்பாக சில நாடுகள் சுற்றுலாப்பயணிகளுக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகளாவிய முதலீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது ஐரோப்பிய ஒன்றியம்




300 பில்லியன் யூரோ மதிப்பிலான உலகளாவிய முதலீட்டுத் திட்டத்தை ஐரோப்பிய ஒன்றியம், அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்துக்கு 'குளோபல் கேட்வே' என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சீனா முன்னெடுத்து வரும் பெல்ட் அண்ட் ரோட் திட்டத்துக்கு மாற்றாக இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நிதி சார் பிரச்சினைகளை எதிர்கொள்ள ஐரோப்பிய ஒன்றிய தரப்பிலிருந்து முன்னெடுக்கப்பட்டிருக்கும் முதல் தீவிர நடவடிக்கையைக் இது குறிக்கிறது.

இதுகுறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உர்சலா வோன் டெர் லெயன் கூறுகையில், 'குளோபல் கேட்வே திட்டம் நம்பகமான திட்டமாக உருவெடுக்க வேண்டும். நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கக் கூடிய திட்டங்களை வடிவமைக்க உலக நாடுகளுக்கு நம்பகமான கூட்டாளிகள் தேவை.

மாறுபட்ட, ஜனநாயக ரீதியிலான அணுகுமுறை வளரும் நாடுகளின் காலநிலை மாற்றம், உலகப் பொதுசுகாதார பாதுகாப்பு, நீடித்த நிலைத்தன்மை கொண்ட மேம்பாட்டு இலக்கை அடைய உதவும் என்பதை நிரூபித்துக் காட்ட விரும்புகிறது' என கூறினார்.

உறுப்பு நாடுகள், நிதி நிறுவனங்கள், தனியார் துறையினரிடமிருந்து திரட்டும் நிதியை எப்படி எங்கு பயன்படுத்துவது என ஐரோப்பிய ஒன்றியம் ஆலோசித்து வருகிறது. இத்தொகையில் பெரும்பகுதி மானியங்களாக வழங்கப்படுவதற்கு பதிலாக, உத்தரவாதங்களாகவோ கடன்களாகவோ வழங்கப்பட உள்ளது.

வளரும் நாடுகளுக்கு உதவிக்கரமாக இருக்கும் என்றால் குளோபல் கேட்வே திட்டத்தை சீனா வரவேற்கிறது என ஐரோப்பிய ஒன்றியத்துக்கான சீன தூதர் ஷாங் மிங் கடந்த மாதம் ஒரு சந்திப்பில் கூறியமை குறிப்பிடத்தக்கது.

சீனாவின் பெல்ட் அண்ட் ரோட் தந்திரம் ஆபிரிக்கா, ஆசியா, இந்தோ பசுபிக், ஐரோப்பிய ஒன்றியம் வரை பரவிவிட்டது.

புதிய வீதிகள், துறைமுகங்கள், ரயில் தடங்கள், பாலங்களில் பணத்தை முதலீடு செய்வதன் மூலம், சீனா பல்வேறு வர்த்தக தொடர்புகளை மேம்படுத்திக் கொண்டது. மேலும் தன் கடன்கள் மூலம் நாடுகளை வளைத்துப் போடுவதாகவும் விமர்சிக்கப்பட்டது.




# கனடாவில் பாலின மாற்று அறுவைச் சிகிச்சைக்கு தடை

கனடாவில் பாலின மாற்று அறுவைச் சிகிச்சைக்கு தடை கோரும் சட்டமூலம், கனடா நாடாளுமன்றத்தின் கீழ்ச்சபையில் (மக்கள் சபை) நிறைவேற்றப்பட்டுள்ளது.


இந்த சட்டமூலம் அடுத்தகட்டமாக மேல்சபையான செனட் சபையின் ஒப்புதலைப்பெற வேண்டும். இந்த சட்டமூலம், மேல்சபையிலும் நிறைவேறி சட்டமாகி விட்டால், கனடாவில் யாரும் பாலின மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள முடியாது.

இந்த சட்டமூலத்தை ஆளும் லிபரல் கட்சி மட்டுமல்லாது, எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சியினரும் ஆதரித்தனர்.

இதற்காக கன்சர்வேடிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கை குலுக்கியதும், கட்டித்தழுவியதும் அங்கு பெரும் வரவேற்பை பெற்றது. இந்த சட்டம் மீது தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக வாக்களிக்க எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சித்தலைவர் எரின் ஓ டூல் அனுமதி அளித்திருந்தார்.

ஆனாலும், உறுப்பினர்கள் ஒருமித்த ஆதரவு அளித்தமை ஆச்சரியம் அளித்தது என்று லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சீமஸ் ஓ ரீகன் கருத்து தெரிவித்தார்.

# லெக்கி படுகொலை அறிக்கையை மறுக்கும் லாகோஸ் அரசாங்கம்



கடந்த ஆண்டு லெக்கி டோல் கேட்டில் நடந்த பொலிஸாரின் வன்முறைகள் தொடர்பாக விசாரிக்க அமைக்கப்பட்ட நீதித்துறை குழுவின் அறிக்கை குறித்து நைஜீரியாவின் லாகோஸ் மாநில அரசு வெள்ளை அறிக்கையை வெளியிட்டுள்ளது.

வெள்ளை அறிக்கை என்பது அரசாங்கத்தின் பகுப்பாய்வு மற்றும் அறிக்கையின் முன்மொழியப்பட்ட தீர்வுகளின் உத்தியோகப்பூர்வ ஆவணமாகும்.

போராட்டக்காரர்களை கலைக்க போராட்ட இடத்திற்குள் புகுந்ததில் சுங்கச்சாவடியில் 9 பேர் இராணுவ வீரர்களால் கொல்லப்பட்டனர்.

இருப்பினும் இந்த உயிரிழப்புக்கள் ஊகங்கள் என தெரிவித்துள்ள லாகோஸ் அரசாங்கம் உயிரிழப்பு இடம்பெற்றதையும் மறுத்துள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு மாநில ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்ட நீதி விசாரணைக் குழுவின் அறிக்கையில், நிராயுதபாணியான போராட்டக்கற்களை இராணுவம் கொன்றது என்றும் 2020 ஒக்ரோபர் 20 சம்பவத்தை மூடி மறைத்ததாகவும் தெரிவித்ததுடன் படுகொலை என்றும் விவரித்துள்ளது.

இருப்பினும் கடந்த வாரம் இது ஒரு படுகொலை இல்லை என் மறுப்பு தெரிவித்திருந்த நைஜீரிய தகவல் அமைச்சர் இந்த அறிக்கை போலி என்று கூறினார்.

இந்நிலையில் 32 பரிந்துரைகளில் 11 ஐ ஏற்றுக்கொண்டதாக நேற்று செவ்வாயன்று லாகோஸ் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதில் 14 பரிந்துரைகள் மாநில அதிகாரத்திற்கு புறம்பானது என்றும், அதன் விளைவாக மத்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் என்றும் கூறியுள்ளது.

# ஓமிக்ரோன் கண்டறியப்பட்டவருக்கு 'நெகட்டிவ்' சான்றிதழ் பரிசோதனை செய்த ஆய்வகம் மீது விசாரணைக்கு உத்தரவு



தென்னாபிரிக்காவிலிருந்து பெங்களூரு வந்த நபருக்கு ஓமிக்ரோன் தொற்று கண்டறியப்பட்ட நிலையில், அவருக்கு கொரோனா நெகட்டிவ் என முடிவு அளித்த ஆய்வகம் மீது விசாரணை நடத்தப்படும் என கர்நாடகா அமைச்சர் அசோகா தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவிலிருந்து டுபாய் வழியாக கடந்த 20ஆம் திகதி பெங்களூரு வந்த நபருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. ஆயினும், அப்போது ஓமிக்ரோன் பற்றிய தகவல் வெளிவராத நிலையில் அவர் ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்டார். பின்னர் அவரது மாதிரிகள் ஓமிக்ரோன் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன.

இதனிடையே, பாதிக்கப்பட்ட நபர் கடந்த 23ஆம் திகதி தனியார் ஆய்வகத்தில் பரிசோதனை செய்ததில் அவருக்கு நெகட்டிவ் என முடிவு வந்ததையடுத்து, 27ஆம் திகதி அந்தச் சான்றைக் காட்டி மீண்டும் அவர் டுபாய்க்குப் புறப்பட்டுச் சென்றார். இந்தநிலையில், சோதனைக்கு அனுப்பப்பட்டிருந்த மாதிரிகளை மீளவும் ஆய்வு செய்ததில் அவருக்கு ஓமிக்ரோன் வகைக் கொரோனாத் தொற்று இருப்பது டிசெம்பர் 2 ஆம் திகதி உறுதிசெய்யப்பட்டது.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய கர்நாடகா அமைச்சர் அசோகா, ஓமிக்ரோன் பாதிப்புடன் டுபாய் புறப்பட்டுச் சென்ற நபரிடம் முன்கூட்டியே நடத்தப்பட்ட பரிசோதனையில் பொசிட்டிவ், நெகட்டிவ் என இருவேறு முடிவுகள் வந்திருப்பது குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்தார். அவருக்கு நெகட்டிவ் என சான்றிதழ் கொடுத்த ஆய்வகத்தின் மீது விசாரணை நடத்தப்படும் என்றும் கர்நாடகா அமைச்சர் அசோகா குறிப்பிட்டிருக்கிறார்.

# தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்களுக்கு பொது இடங்களுக்குச் செல்லத் தடை


மதுரை மாவட்டத்தில் தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்கள் பொது இடங்களுக்குச் செல்ல தடைவிதிக் கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்திருக்கிறார்.

தடுப்பூசி செலுத்திக்கொள்ளாத நபர்கள் நியாய விலைக்கடை, வியாபார நிறுவனங்கள், வணிக வளாகங்கள், திரையரங்கம், திருமண மண்டபம், கடைவீதிகள், துணிக் கடைகள், வங்கிகள் உள்ளிட்ட 18 இடங்களுக்குச் செல்லத் தடை விதிக் கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் அறிவித்திருக்கிறார். மதுரை மாவட்டம் தடுப்பூசி செலுத்திக்கொள்வதில் மோச மான நிலையில் உள்ளதாக தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் தெரிவித்தி ருக்கும் நிலையில், ஆட்சியர் இந்த அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதுவரை மதுரை மாவட்டத்தில் முதல் தவணை 71 சதவீதம் பேரும், 2ஆம் தவணை 32 சதவீதம் பேரும் மட்டுமே செலுத்திக் கொண்டுள்ளனர். ஏற்கெனவே கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் தடுப்பூசி செலுத்தாதவர்கள் பொது இடங்களுக்குச் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்ட நிலையில் தற்போது மதுரை மாவட்டமும் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.




# தமிழக முன்னாள் ஆளுநர் ரோசய்யா உடல்நலக் குறைவால் காலமானார்



தமிழ்நாட்டின் முன்னாள் ஆளுநர் ரோசய்யா தனது 88 ஆவது வயதில், மூப்பு காரணமாக ஏற்பட்ட உடல் நலக்குறைவால் காலமா னார்.

இவர், 2011 முதல் 2016 ஆம் ஆண்டு வரை தமிழ கத்தின் ஆளுநராகப் பணி யாற்றியுள்ளார். ஆந்திர மாநில முதலமைச்சராக 2009 முதல் 2010 ஆம் ஆண்டு வரை இவர் பதவி வகித்துள்ளார். 1933 ஆம் ஆண்டு பிறந்த இவர், ஐத ராபாத்தில் உடல்நலக் குறைவு ஏற்பட்டு மருத்துவம னையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் காலமாகியுள்ளார்



# டெல்லியில் காற்று மாசுக்கு பாகிஸ்தான் காரணம் உச்ச நீதிமன்றத்தில் உத்தரப்பிரதேச அரசு தகவல்

டெல்லியில் காற்று மாசு ஏற்படுவ தற்கு பாகிஸ்தானிலிருந்து அதிக அள வில் மாசுபட்ட காற்று அடித்து வரப்ப டுவதே காரணம் என உத்தரப் பிரதேச அரசு உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

டெல்லியில் நிலவும் காற்று மாசுபாடு தொடர்பான வழக்கு விசா ரணை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் நடைபெற்றது. காற்று மாசு தொடர்பாக வழக்கைத் தாக்கல் செய்த மனுதாரர் தரப்பி னால், உத்தரப்பிரதேச மாநிலத்தில் இருக்கும் கரும்பு ஆலைகள் வெளி யிடும் மாசு இந்த வளிமண்டல பாதிப் புக்கு முக்கிய காரணம் என வாதம் முன்வைக்கப்பட்டது. அப்போது குறுக்கிட்ட உத்தரப் பிரதேச அரசு தரப்பு வழக்கறிஞர், பாகிஸ்தானில் இருந்து வரக்கூடிய காற்று, மாசுக் குரிய தூசுகளை எடுத்து வருவதால் தான் காற்று மாசுபாடு ஏற்படுகிறது என்று பதிலளித்திருக்கிறார். அப்போது குறுக்கிட்ட தலைமை நீதி பதி அப்படி என்றால் பாகிஸ்தானில் இருக்கக் கூடிய தொழிற்சாலை களுக் கும் தடை விதிக்கவேண்டும் என கேட்கிறீர்களா? என வின வினார்.

இதனிடையே காற்று மாசு பாட்டைக் குறைப்பதற்காக இந்திய மத்திய மற்றும் டெல்லி மாநில அரசுகள் முன்வைத்த யோசனை களை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. காற்றுமாசுபாட்டை குறைப்பதற்கான ஐந்து பேர் கொண்ட சிறப்புக்குழு மற்றும் 40இற்கும் மேற்பட்ட அதிரடி கண்காணிப்புப்பிரிவுஉள்ளிட்டவை உருவாக்கப் பட்டுள்ளதாக மத்திய மாநில அரசுகள் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தன. இதனை ஏற்ற உச்சநீதிமன்றம், மருத்துவமனைக் கட்டுமா னப் பணிகளை தவிர மற்ற கட்டுமா னப் பணிகளுக்கு தடை விதித்து உத்தரவிட்டது.

# நீட் தேர்வை ரத்து செய்யும் மசோதா மாநிலங்களவையில்



நீட் தேர்வை ரத்துச் செய்யக் கோரும் தனிநபர் மசோதாவை மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பியான வில்சன் அறிமுகம் செய்தார்.

முன்னதாக, 'நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கான விலக்கை தாம் ஆட்சிக்கு வந்தால் கொண்டு வந்து விடுவோம்' என தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. அது குறித்து இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதுவது உள்ளிட்டவற்றை மேற்கொண்டு வரக்கூடிய சூழலில், அதற்கான மற்றொரு முயற்சியாக தி.மு.க வின் மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் இந்த தனிநபர் மசோதாவை அறிமுகம் செய்துள்ளார் எனக் கருதப்படுகிறது.

தனிநபர் மசோதா என்பது ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இருக்கக்கூடிய மிக முக்கியமான அதி காரங்களில் ஒன்றாகும். இதன்மூலமாக நாட்டின் எந்த ஒரு பிரச்சினை குறித்தும் புதிய சட்டத்தையோ அல்லது சட்டத் திருத்தத்தையோ கொண்டுவருவதற்கான மசோதாக்களை தாக்கல் செய்ய அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அதனடிப்படையில், இந்த நீட் தேர்வு ரத்துக்கான தனிநபர் மசோதாவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# சேதனப் பசளை விவகாரத்தில் சீனா பாடம் கற்றுத் தந்துள்ளது

## கோவிந்தம் கருணாகரன் தெரிவிப்பு

சீனாவை நண்பனாக்கி இந்தியாவைச் சீண்டிக் காரியமாற்ற விளைகின்றீர்கள். ஆபத்தில் காப்பாற்றுவான் என நம்பிய சீனா சேதனப் பசளை விவகாரத்தில் உங்களுக்கு நல்லதொரு பாடத்தைக் கற்றுத் தந்துள்ளது என சபையில் சுட்டிக்காட்டிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரன், சீனாவை நண்பனாக்குவதற்காக இந்தியாவை எதிரியாக்கும் கொள்கையினை மறந்து இந்தியாவும் சீனாவும் எமது நண்பர்கள் என்ற நிலைமைக்கு உங்களது கொள்கையினை மாற்றுங்கள் என்றார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு, சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

கொவிட் - 19 பெருந்தொற்றினை உங்களது தவறான கொள்கைகளால் கட்டுப்படுத்த முடியாது தமது உயிரினைக் கூட துச்சமென மதித்து கடமையாற்றிக் கொண்டிருக்கும் அலுவலர்களைக் கொண்ட சுகாதாரத்துறைக்கு ஒதுக்கீடு 6.13 வீதம்.


உற்பத்தித் துறைக்கு முக்கிய பங்களிக்கும் விவசாயத்துறைக்கு 0.97 வீதம். ஒட்டு மொத்த பாதீட்டு ஒதுக்கீட்டை நோக்கும் போது இது மக்கள் நலன் சார்ந்த, நாட்டு நலன் சார்ந்த பாதீடாக நோக்க முடியவில்லை.

சில ஒதுக்கீடுகளின் அதிகரிப்பினை நோக்கும் பொழுது அது பேசன்ரேஜ் பெறுவதற்கான ஒதுக்கீடாகவே நோக்க முடிகிறது. ஒரு வகையில் இது மக்கள் நலன் சார்ந்த பாதீடு என்பதை விட, நாட்டின் பொருளாதார நலன் சார்ந்த பாதீடு என்பதை விட, ஆட்சியாளர்களுக்கான பேர்சன்ரேஜ் பாதீடு என்பதே பொருத்தம் என்பது எனது கருத்தாகும்.

பாதுகாப்புத் தொடர்பாக நான் கூற விரும்புவது இந்து சமுத்திரத்தில் நமது நாட்டின் கேந்திர மையம், பிராந்திய ஒத்துழைப்பு, பிராந்திய அபிவிருத்தி மற்றும் பிராந்தியப் பாதுகாப்பு என்பன தொடர்பாக நம் நாட்டுக்குத் தேவையான தெளிவான கொள்கை ஒன்று இன்னும் இல்லை.

அதை உருவாக்கவும் நீங்கள் முனையவில்லை. தவறான வெளிநாட்டுக் கொள்கைகளை மேற்கொண்டு நமது நாட்டிற்கே பெருமையுடன் இருந்த அணிசேராக் கொள்கையினை அழித்துவிட்டு தென்னாசியப் பிராந்திய வல்லரசான இந்தியாவுக்கு சவால் விடும் அளவுக்கு கொள்கைகளை வகுப்பதிலேயே நீங்கள் கவனம் செலுத்துகின்றீர்கள். உங்களது அமைச்சரவையின் சில அமைச்சர்களது அறிவீனமான உரைகள் புத்திஜீவித்துவமற்ற உரைகள் இவற்றையே தெளிவாகக் காட்டுகின்றன.

அண்டை நாடான இந்தியாவுடனான வரலாற்று, கலாசார, பாரம்பரிய, மதத் துறைகளில் இரு நாடுகளுக்குமிடையே பிரிக்க முடியாத பிணக்குகள் ஏற்பட முடியாத இணைப்பு வரலாற்றுக் காலம் முதல் உள்ளது என்பதை நீங்கள் இலகுவாக மறந்து விடுகிறீர்கள்.



சீனாவை நண்பனாக்கி இந்தியாவைச் சீண்டிக் காரியமாற்ற விளைகின்றீர்கள். ஆபத்தில் காப்பாற்றுவான் என நம்பிய சீனா சேதனப் பசளை விவகாரத்தில் உங்களுக்கு நல்லதொரு பாடத்தைக் கற்றுத் தந்துள்ளது. அதிலிருந்தாவது உங்கள் வெளிநாட்டுக் கொள்கை, தேசிய பாதுகாப்புக் கொள்கைகளின் மீதான தவறுகளைத் திருத்த விளையுங்கள்.

சீனாவை நண்பனாக்குவதற்காக இந்தியாவை எதிரியாக்கும் கொள்கையினை மறந்து இந்தியாவும் சீனாவும் எமது நண்பர்கள் என்ற நிலைமைக்கு உங்களது கொள்கையினை மாற்றுங்கள். என தெரிவித்துள்ளார் .



## பொருளாதார ரீதியில் வலுப்படுத்துவதற்கு பெண் பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சி

ஜேர்மன் ஹோப்ரேன் மற்றும் பிளான் இன்டநெஷனல் நிறுவனங்களின் நிதிப் பங்களிப்பில் பெரண்டினா அபிவிருத்திச் சேவை நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ‘இலங்கை சமூக அமைப்புகளிலுள்ள பெண்கள் மற்றும் இளைஞர்களை கிராமிய தொழில் முயற்சியாண்மையில் வலுப்படுத்தல்’ என்னும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ‘பெண்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்தல், தொடர்பாக பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி அம்பாறையில் இடம் பெற்றது.

பெரண்டினா நிறுவனத்தின் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு திட்ட முகாமையாளர் எஸ்.சிவராஜாவின் தலைமையில் பெரண்டினா நிறுவனத்தின் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட கண்காணிப்பு, மதிப்பீடு உத்தியோகத்தர் சுவாஜினி ராஜனின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள்.

இவ்விரண்டு நாள் பயிற்சி வகுப்பிற்குபால்நிலைதொடர்பான விசேட வளவாளர் சிறியானி பெரேரா கலந்து கொண்டு பால்நிலைபற்றியஎண்ணக்கருக்கள், பெண்களின் பொருளாதார வலுவூட்டலுக்கான சட்டகம், பெண்களின்தொழில்முயற்சியாண்மை, கிராமிய தொழில் முயற்சிகளில் வலுவான பெண்கள் மற்றும் இளைஞர்களின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் எனும் தலைப்பில் பயிற்சிகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீஸன், பெரண்டினா நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு முகாமையாளர் எஸ்.டி.என்.மதுசங்க,பெரண்டினா நிறுவனத்தின் அம்பாறை அலுவலக திட்ட உத்தியோகத்தர் இதயகுமார், நிர்வாக உத்தியோகத்தர் காதி அஹமட் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

## உவர்மலையில் கைக்குண்டு மீட்கப்பட்டது

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உவர்மலை பகுதியில் கைக்குண்டொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளதாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

உவர்மலை லோவர் வீதியிலுள்ள கடற்கரைக்கு அருகில் கைக்குண்டு ஒன்று இருப்பதாக தலைமை பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியதையடுத்து குறித்த இடத்திற்கு பொலிஸார் விரைந்தனர்.

இதனையடுத்து கைக்குண்டு இருப்பதை உறுதி செய்து திருகோணமலை நீதிமன்றில் பி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அதனை வெடிக்க வைப்பதற்குரிய நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இந்நிலையில் குறித்த கைக்குண்டைசுற்தாபுரவிசேடபொலிஸ் அதிரடிப் படையினர் மீட்டமையுடன் அதனை வெடிக்க வைப்பதற்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.



## மட்டக்களப்பில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்



கடந்த காலத்தில் மாற்றுத்திறனாளிகள் நாட்டுக்கு பாரமானவர்களாக பார்க்கப்பட்டார்கள். இன்று அவர்களை நாங்கள் மற்றவர்களுடன் ஒன்றிணைத்திருக்கின்றோம். எதிர்காலத்தில் நாட்டுக்கு முன்னுதாரணமாகவும் பொருளாதார ரீதியில் பங்களிப்புசெய்யவேண்டிய தேவையும் மாற்றுத்திளனாளிகளுக்கு இருக்கின்றது என கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்களத்தின் பணிப்பாளர் என்.மதிவண்ணன் தெரிவித்தார்.

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமான நேற்று ஊனமுற்றநபர்களின் தலைமைத்துவம் மற்றும் பங்கேற்பு உள்ளடக்கிய, அணுகக்கூடிய மற்றும் நிலையான கொவிட்-19 இற்குப் பிந்தைய உலகம். எனும் தொனிப் பொருளிற்கு அமைய கிழக்கு மாகாண சர்வதேச மாற்றுத்திறனாளிகள் நாள் மட்டக்களப்பில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய என்.மதிவண்ணன், மாற்றுத்திறனாளிகள் அதிகமுள்ள மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகின்றது. இதே போன்று மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகளவான சேவையினை வழங்கும் மாவட்டமாகவும் இந்த மாவட்டம் காணப்படுகின்றது.

கடந்த காலத்தில் தொழில் தகைமைகளை பெற்றுக்கொள்வதற்காக மாற்றுத்திறனாளிகளுக்காக மாற்று ஒழுங்குகளையும் பரீட்சைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதில் இந்த மாவட்டத்தில் வெற்றியும் காணப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் மாற்றுத்திறனாளிகள் நாட்டுக்கு பாரமானவர்களாக பார்க்கப்பட்டார்கள். இன்று அவர்களை நாங்கள் மற்றவர்களுடன் ஒன்றிணைத்திருக்கின்றோம். எதிர்காலத்தில் நாட்டுக்கு முன்னுதாரணமாகவும் பொருளாதார ரீதியில் பங்களிப்புச் செய்யவேண்டிய தேவையும் மாற்றுத்தினாளிகளுக்கு இருக்கின்றது என்றார்.

1992 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய நாடுகள் சபையினால் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தொனிப்பொருளிற்கு அமைய டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி மாற்றுத்திறனாளிகள் நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# இந்திய அணியுடனான 2ஆவது டெஸ்ட் போட்டி நியூசிலாந்து அணி 62 ஓட்டங்களுக்கு அவுட்!

இந்தியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நேற்றுத் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்திருந்தது.

புஜாராவும், கப்டன் விராட் கோலியும் ஓட்டமெதனையும் எடுக்காது ஆட்டமிழந்திருந்த நிலையில், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மயங்க் அகர்வால் சிறப்பாக விளையாடி 150 ஓட்டங்களை எடுத்தார். அக்சர் பட்டேல் 52 ஓட்டங்களையும், சுப்மன் கில் 44 ஓட்டங்களையும் சேர்க்க, இந்திய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 325 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தப் போட்டியில் மும்பையில் பிறந்தவரும், நியூசிலாந்து அணிக்காக விளையாடிவரும் வீரருமான அஜாஸ் பட்டேல் 47.5 ஓவர்கள் வீசி இந்திய அணியின் 10 விக்கெட்டுக்களையும் கைப்பற்றி புதிய சாதனை படைத்தார்.

காயம் காரணமாக அணித்தலைவர் கேன் வில்லியம்சன் விளையாடாத நிலையில், நியூசிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பாட்டத்தில் தடுமாறி விக்கெட்டுக்களை அடுத்தடுத்து இழந்து 62 ஓட்டங்களுக்குச் சுருண்டுள்ளது. அஸ்வின் 4 விக்கெட்டுக்களையும், மொஹமட் சிராஜ் 3, அக்சர் பட்டேல் 2 விக்கெட்டுக்களையும் ஜயன்த் ஜாதவ் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

## 132 வருடங்களுக்குப் பின்

# இரு டெஸ்ட் தொடர்களில் நான்கு கப்டன்கள்



இந்திய, நியூசிலாந்து கிரிக்கெட் தொடரில், 132 ஆண்டுகளுக்குப் பின் 2 டெஸ்ட் போட்டிகளுக்கு 4 கப்டன்கள் அணிகளை வழிநடத்தி சாதனை படைத்துள்ளனர்.

கிரிக்கெட் தொடரொன்றில் அடுத்தடுத்த இரு டெஸ்ட் போட்டிகளுக்கு 4 தலைவர்கள் அணியை வழிநடத்துவது கிரிக்கெட்டில் மிகவும் அரிதான சம்பவமாகும்.

இதற்கு முன் 1889 ஆம் ஆண்டு இரு டெஸ்ட் போட்டிகளுக்கு 4 அணித் தலைவர்கள் செயல்பட்டிருந்தனர்.

தென்னாபிரிக்காவுக்கு இங்கிலாந்து அணி பயணம் செய்தபோது தென்னாபிரிக்க அணிக்கு ஓவன் டன்னல், வில்லியம் மில்டன் என இரு போட்டிகளுக்கு இரு கப்டன்களும், அதேபோல இங்கிலாந்து அணிக்கு ஒப்ரே ஸ்மித், மொன்ரி பௌடன் என இரு கப்டன்களும் வழிநடத்தியிருந்தனர். அதனையடுத்து, 132 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது நடைபெறும் இந்திய - நியூசிலாந்து தொடரில், அடுத்தடுத்த 2 டெஸ்ட் போட்டிகளுக்கு 4 கப்டன்கள் அணிகளை வழிநடத்தி சாதனை படைத்துள்ளனர்.

கான்பூரில் நடந்த முதல் டெஸ்டில் இந்திய அணி கப்டனாகரகானேபொறுப்பேற்றார். மும்பையில் நடந்து வரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விராட் கோலி விடுமுறை முடிந்து வந்து பொறுப்பேற்றுக்கொண்டார். அதேபோன்று, நியூசிலாந்து அணியில் கான்பூர் டெஸ்ட் போட்டிக்கு வில்லியம்சன் கப்டனாக செயற்பட்டிருந்தார். அவருக்கு முழங்கையில் உபாதை ஏற்பட்டதால், மும்பை டெஸ்ட் போட்டியில் பங்கேற்கவில்லை. அவருக்குப் பதிலாக டொம் லதாம் அணித் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.





# பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடர் ஜனவரியில் ஆரம்பமாகிறது

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் பாகிஸ்தான் சுப்பர் லீக்கின் ஏழாவது தொடர் 2022ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் திகதி பாகிஸ்தானில் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான வீரர்களுக்கான வரைவு அடுத்த ஞாயிற்றுக் கிழமை இறுதி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மார்ச்- ஏப்ரல் மாதங்களில் ஆஸ்ரேலியாவுடனான பாகிஸ்தானின் கிரிக்கெட் தொடருக்கு இடமளிப்பதற்காக வழமையான திகதியிலிருந்து தொடர் ஆரம்பமானது சுமார் ஒரு மாதம் முன்னோக்கி நடத்தப்படுவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

தொடரின் முதல் 15 போட்டிகள் ஜனவரி 27ஆம் திகதி முதல் பெப்ரவரி 9ஆம் திகதி வரை கராச்சியிலும், அதன் பின்னரான அனைத்துப் போட்டிகளும் லாகூரில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடரின் இறுதிப்போட்டி பெப்ரவரி 27ஆம் திகதி நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்தவருடம் மார்ச் - ஏப்ரலில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி முழுமையான தொடர் ஒன்றுக்கு பாகிஸ்தானுக்கு வரவிருக்கிறது. இங்கிலாந்து அணி இரண்டு தடவை வரப்போகிறது. இப்படியான சிறப்பான தருணத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் லீக்கின் ஏழாவது தொடர் பற்றிய அறிவிப்பைத் தருவதில் மகிழ்கிறேன், என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ரமீஸ் ராஜா தெரிவித்திருக்கிறார்.

# ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டுக்கள் அஜாஸ் படேலுக்கு கும்ப்ளே பாராட்டு

மும்பை டெஸ்ட் போட்டியில் இந்தியாவுக்கு எதிராக ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை புரிந்த நியூசிலாந்து சுழல் பந்துவீச்சாளர் அஜாஸ் படேலுக்கு மற்றொரு சாதனையாளர் அனில் கும்ப்ளே பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மும்பையில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 325 ஓட்டங்களை எடுத்தது.

நியூசிலாந்துச் சுழல் பந்து வீச்சாளர் அஜாஸ் படேல், 47.5 ஓவர்கள் வீசி, 119 ஓட்டங்களைக் கொடுத்து இந்திய அணியின் 10 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி சாதனை படைத்துள்ளார். டெஸ்ட் கிரிக்கெட்டில் இங்கிலாந்தின் ஜிம் லேகர், இந்திய அணியின் அனில் கும்ப்ளே இருவருக்கும் அடுத்ததாக டெஸ்ட் போட்டிகளில் ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டுக்களையும் வீழ்த்திய மூன்றாவது பந்துவீச்சாளர் என்கிற சாதனையை அஜாஸ் படேல் படைத்துள்ளார்.

அஜாஸ் படேலின் இந்தச் சாதனைக்கு இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவரும், ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டுக்களை வீழ்த்திய சாதனையாளருமான அனில் கும்ப்ளே பாராட்டுத் தெரிவித்துள்ளார். ‘அருமையாகப் பந்து வீசினீர்கள். டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இரு நாள்களில் இச்சாதனையை நிகழ்த்தியது சிறப்பானது’ என்று அவர் தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்து அணியின் ஜிம் லேகர் 1956 இல் ஆஸ்திரேலிய அணியுடனும், அனில் கும்ப்ளே 1999 இல் பாகிஸ்தானுடனும் ஒரே இன்னிங்ஸில் 10 விக்கட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்தி

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் உயர் நீதிமன்று முன் அமைதிப்போராட்டம்




பதினொருபேர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னாகொடவிற்கு எதிராகக் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்யாமலிருப்பதற்கு சட்ட மா அதிபர் தீர்மானித்திருக்கின்றார். அந்த 11 பேரும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு மரணிக்கவில்லை.

மாறாக கப்பம்பெறும் நோக்கில் வசந்த கரன்னாகொட உள்ளிட்ட குழுவினரால் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்டிருக்கின்றனர் என்று சுட்டிக்காட்டியுள்ள காணாமல்போனோர் குடும்ப ஒன்றியத்தின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ, ராஜபக்ஷவின் பிள்ளைகள் வெளியே சென்றுவிட்டு, மாலையில் வீடு திரும்பவில்லையெனின் அவர்களது உணர்வு எத்தகையதாக இருக்கும்? என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடந்த 2008 ஆம் ஆண்டு கப்பம்பெறும் நோக்கில் 5 மாணவர்கள் உள்ளடங்கலாக 11 பேர் கடத்தப்பட்டு, காணாமலாக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்று 13 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அந்த விவகாரம் தொடர்பில் இன்னமும் நீதிநிலைநாட்டப்படவில்லை.

மேற்படி 11 பேர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னாகொட உள்ளடங்கலாக கடற்படை அதிகாரிகள் 14 பேருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்வதற்கான தீர்மானம் முன்னாள் சட்ட மா அதிபரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இருப்பினும் அதற்கு மாறாக வசந்த கரன்னாகொடவிற்கு எதிராகக் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்யாமல் இருப்பதற்குத் தற்போதைய சட்ட மா அதிபர் சஞ்சய் ராஜரத்னம் தீர்மானித்துள்ள நிலையில், அதற்கு எதிராக காணாமல்போனோரின் குடும்ப ஒன்றியத்தால் ஏற்கனவே போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவந்தன. இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதையடுத்து தமக்கான நீதியை வழங்குமாறுகோரி காணாமல்போனோர் குடும்ப ஒன்றியத்தின் உறுப்பினர்கள் புதுக்கடை நீதிமன்றத்துக்கு முன்பாக அமைதி வழிப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கான நீதியை நிலைநாட்டுமாறுகோரி மேற்படி அமைதிவழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னாகொடவின் குற்றப்பத்திரிகையை வாபஸ்வாங்கிய சட்ட மா அதிபரின் கேவலமான செயலைக் கண்டிக்கின்றோம்', '11 பேர் கடத்தப்பட்ட வழக்கு – சட்டமா அதிபரின் காட்டிக்கொடுப்பைத் தோற்கடிப்பதற்கு நீதிமன்றத்தின்மீது நம்பிக்கை கொண்டிருக்கின்றோம்', 'சட்டம் இல்லாத இடத்துக்கு எதற்கு சட்டமா அதிபர்?', 'சட்டமா அதிபர் பாதிக்கப்பட்டவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றாரா? அல்லது குற்றவாளிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றாரா?', 'உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள்நிகழாமையை உறுதிப்படுத்துங்கள்' என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

அங்கு கருத்து வெளியிட்ட காணாமல்போனோர் குடும்ப ஒன்றியத்தின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ கூறியவை வருமாறு –

பதினொருபேர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னாகொடவிற்கு எதிராகக் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்யாமலிருப்பதற்கு சட்ட மா அதிபர் தீர்மானித்திருக்கின்றார். அதற்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நாம் மேன்முறையீடு செய்திருந்தோம்.

இருப்பினும் சட்டமா அதிபர் அவரது தீர்மானத்தை செயற்படுத்தமுடியும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் இந்த விடயம் தொடர்பில் மக்களுக்கு தெரியப்படுத்துவதற்கு மாத்திரமே எம்மால் முடியும்.

ஆனால், சட்ட மா அதிபரின் செயற்பாடு நியாயமானதல்ல என்பது அனைவருக்கும் தெரியும். ஏனெனில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 11 பேரும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு மரணிக்கவில்லை.

மாறாகக் கப்பம்பெறும் நோக்கில் அவர்கள் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்டிருக்கின்றார்கள். எனவே, அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மை வெளிப்படுத்தப்படவேண்டும்.

கோட்டாபயராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷவின் பிள்ளைகள் வெளியே சென்றுவிட்டு, மாலையில் வீடு திரும்பவில்லையெனின் அவர்களது உணர்வு எத்தகையதாக இருக்கும்? அவர்களுக்கு அத்தகைய துன்பம் ஏற்படவேண்டும் என்று நாம் ஒருபோதும் விரும்பவில்லை. ஆனால், காணாமலாக்கப்பட்டவர்களின் தாய்மாரின் வேதனையைப் புரிந்துகொள்வதுடன் அவர்களுக்கான நீதி நிலைநாட்டப்படுவதை உறுதி செய்யவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக இருக்கின்றது என்று குறிப்பிட்டார். அதேவேளை, கடத்தப்பட்டுக் காணா மலாக்கப்பட்ட பதினொருபேரில் ஒருவரான ரஜீவ் நாகநாதனின் தாயார் சரோஜினி நாகநாதன் கூறுகையில் –

உயர்தரப்பரீட்சை எழுதிவிட்டு மருத்துவத்துறையில் உயர்கல்வியைத் தொடர்வதற்காக லண்டன் செல்வதற்கு எதிர்பார்த்திருந்த எனது மகன் கடத்தப்பட்டு 13 வருடங்கள் பூர்த்தியடைந்திருக்கின்றன. எனது மகனுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறிந்துகொள்வதற்காக 13 வருடங்களாகத் தொடர்ச்சியாகப் போராடிவருகின்றபோதிலும், இன்னமும் நீதி வழங்கப்படவில்லை. எனக்கு எந்தவொரு இழப்பீடும் தேவையில்லை. மாறாக, எனது மகனை மீட்டுத்தாருங்கள். – என்று கண்ணீருடன் உருக்கமாகக் கோரினார்.

## 'புத்திகெட்ட மனிதர் எல்லாம்' முழுநீள திரைப்பட முன்னோட்டம்

'புத்திகெட்ட மனிதர் எல்லாம்' என்கிற முழு நீளத் திரைப்படத்தின் முன்னோட்டம் வியாழக்கிழமை 6 மணியளவில் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் வைத்து படக்குழுவினரால் வெளியிடப்பட்டது.

இதன்போது படக்குழுவினர், படத்தில் பணியாற்றியவர்கள் தங்களது அனுபவங்கள் திரைப்படம் தொடர்பான விடயங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

பிளக்போர்ட் இன்டர்நேஷனல் வழங்கும் 'புத்திகெட்ட மனிதர் எல்லாம்' திரைப்படம் டிசெம்பர் 24,25,26 ஆம் திகதிகளில் திரையரங்குகளில் வெளியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ராஜ் சிவராஜின் இயக்கத்தில் பூவன் மதீசனின் இசையில் உள்நாட்டுக் கலைஞர்கள் பலரின் பங்கேற்பில் வெளியாகவுள்ள இத்திரைப்படம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பாரிய பொருளாதார தட்டுப்பாட்டை நாடு முகம் கொடுக்கப் போகிறது!

### அநுர குமார எச்சரிக்கை



நாட்டில் பாரிய அளவில் பொருள்கள் தட்டுப்பாடு ஏற்படப்போவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக குறிப்பிட்டுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக வால் 27½2 இன் கீழ் கேள்வி எழுப்பும் வேளையிலேயே இதனைக் கூறியுள்ளார்.

வெளிநாட்டு கையிருப்பு நெருக்கடி காரணமாக அத்தியாவசியப் பொருள்கள் உள்ளடங்கிய ஆயிரத்துக்கும் அதிகமான கொள்கலன்கள் விடுவிக்கப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் இதனை விடுவிக்க இறக்குமதியாளர்களுக்கு வங்கிகளில் டொலர்களை விடுவிக்க முடியாத நிலையொன்று ஏற்பட்டுள்ளதாகவும் அநுரகுமார திசாநாயக குறிப்பிட்டுள்ளார்.

## தொழிற்சங்கங்களின் நாசகார நடவடிக்கையே மின்சாரத் தடை

### பொது முகாமையாளர் எம்.ஆர். ரணதுங்க காட்டம்

நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள மின்சாரத் தடை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள மின்சார பொறியியலாளர் தொழிற்சங்கங்களின் நாசகார நடவடிக்கையாக இருக்கலாம் என இலங்கை மின்சார சபை சந்தேகம் வெளியிட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) பகல் முதல் மின் விநியோகம் தடை செய்யப்பட்டது. இந்த நிலையில், மின் தடை தொடர்பாக ஆங்கில ஊடக மொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே, மின்சார சபையின் பொது முகாமையாளர் எம்.ஆர். ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் மின்சாரத்தை மீளப்பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், ஆனால் தொழிற்சங்கங்கள் தமக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளமையால், மின்வெட்டு நாசகார நடவடிக்கையாகக் கூட இருக்கலாம் என சந்தேகிப்பதாகவும் அவர் கூறினார். எவ்வாறாயினும், நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்தடைக்கான காரணம் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படும் என்றும், கூடிய விரைவில் மின்சாரத்தை மீட்டெடுப்பதே முன்னுரிமை எனவும் அவர் கூறினார்.

## மருத்துவக் கருத்தமர்வு

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள யாவர்க்கும் நலம் எனும் நிகழ்ச்சித் தொடரானது zoom செயலி ஊடாக இன்று மாலை 7மணி தொடக்கம் 9 மணி வரை நடைபெறவுள்ளது.

இந் நிகழ்ச்சித் தொடரில் இந்தவாரம் பால்வினை நோய்களும் அதற்கான தீர்வுகளும் எனும் தலைப்பில் கருத்தமர்வு நடைபெறவுள்ளது.

meeting id- 89985282023, passcode - 354485

## நினைவு தினம்

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் அவர்களின் 57வது நினைவு தின நிகழ்வு நாளை காலை 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் சுந்தரலிங்கத்தின்(தலைவர் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை) தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.12.2021இல் வெளியிடப்பெற்றது.